258, எம் வின்சென்ட் பெரேரா
மாவத்தை
கொழும்பு 14
0114700800

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நுவரெலியாவிலுள்ள மருத்துவ ஸ்தாபனங்களுக்கான பங்களிப்புக்களுடன் தொடர்ந்தும் சுகாதாரத்துறைக்கு உதவி வருகின்றது**

*Ceytea தேயிலைத் தொழிற்சாலை ரூபா 2 மில்லியன் பெறுமதியுள்ள அத்தியாவசிய மருத்துவ உபகரணங்களை நன்கொடையளித்துள்ளது*

**கொழும்பு, ஆகஸ்ட் 5, 2021:** அக்கரப்பத்தனையில் உள்ள யூனிலீவர் ஸ்ரீலங்காவின் Ceytea தேயிலைத் தொழிற்சாலை, சமீபத்தில் நுவரெலியா பிராந்தியத்தில் உள்ள மருத்துவ ஸ்தாபனங்களுக்கு ரூபா 2 மில்லியன் மதிப்புள்ள மிகவும் தேவையான மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. தற்போது பரவி வருகின்ற நோயுடன் நாடு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில், நுவரெலியாவில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனை, அக்கரப்பத்தனையில் உள்ள பிரதேச மருத்துவமனை, லிந்துலவில் உள்ள பிரதேச மருத்துவமனை மற்றும் லிந்துல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகிய ஸ்தாபனங்கள் இந்த நன்கொடையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட மருத்துவ ஸ்தாபனங்கள் இப்பகுதியில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு பொறுப்பாக உள்ள நிலையில், நோய்களை இனங்காணும் சில அத்தியாவசிய தொழில்நுட்பங்கள் மற்றும் அன்றாடம் உபயோகிக்கும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் இங்கு பற்றாக்குறையாக உள்ளன. இந்த தேவைகளை இனங்கண்ட பின்னர், பிசிஆர் சோதனைக்கான இயந்திரம் ஒன்று (Centrifuge Machine), மின்பிறப்பாக்கி ஒன்று, உறிஞ்சல் இயந்திரம் ஒன்று (Suction Machine), கழிவுத் தொட்டிகள், KN 95 முகக்கவசங்கள், சத்திரசிகிச்சை முகக்கவசங்கள், முகப் பாதுகாப்புக்கான தடுப்புக் கவசங்கள், காலணிகள், படுக்கை விரிப்புக்கள் மற்றும் கொதிகலன்கள் உள்ளிட்ட பல பொருட்களை நன்கொடையாக வழங்க Ceytea முன்வந்தது.

இந்த நன்கொடை தொடர்பில் **யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வழங்கல் சங்கிலிக்கான பணிப்பாளரான ஜெராட் இருதயராஜ்** அவர்கள் கருத்து வெளியிடுகையில், *''கிட்டத்தட்ட 60 வருடங்களுக்கு முன்பு நாம் Ceytea மூலமாக எங்கள் உற்பத்தி தொழிற்பாடுகளை ஆரம்பித்ததிலிருந்து, பல்வேறுபட்ட நிலைபேறாண்மை செயற்திட்டங்கள் மற்றும் சமூகங்களைக் கட்டியெழுப்பும் செயற்திட்டங்கள் மூலம் நுவரெலியா சமூகத்துடன் வலுவான மற்றும் நீண்ட காலமாக நிலைபெற்றுள்ள பிணைப்புகளை நாம் கட்டியெழுப்பியுள்ளோம். எனவே, நாடு தற்போது தொற்றுநோயை எதிர்த்துப் போராடி வருகின்ற நிலையில், உதவி தேவைப்படும் தருணத்தில் அவர்களுக்கு உதவ வேண்டியதை எங்கள் கடமையாகவே நாங்கள் கருதுகிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

**யூனிலீவர் ஸ்ரீலங்காவின் Ceytea தொழிற்சாலை முகாமையாளரான அனுஷா கொத்தலாவல** அவர்கள் தனது எண்ணங்களைப் பகிர்கையில், *''எங்களால் இதற்கு உதவ முடியும் என்று எங்களுக்குத் தெரியவந்தபோது, எங்களால் முடிந்த உதவிகளைச் செய்வதில் எங்களுக்கு எந்தத் தயக்கமும் இன்றி முன்வந்தோம். நுவரெலியா பிராந்தியத்தில் உள்ள எமது தேசத்தின் சக பிரஜைகளுக்கு உதவுவது எமக்கு மனநிறைவளிப்பதுடன், எங்கள் பங்களிப்புகள் இப்பகுதியில் சுகாதார சேவைகளின் தரத்தை மேலும் வலுப்படுத்தும் என்று நம்புகிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

**நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளரான வைத்தியர் டபிள்யூ. ஆர். எம். மகேந்திர செனவிரத்ன** அவர்கள் கருத்து வெளியிடுகையில், *''இந்த கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் போது எங்கள் மருத்துவமனைக்கு தாராள மனதுடன் நன்கொடை அளித்துள்ள யூனிலீவர் நிறுவனத்துக்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். நன்கொடையாக வழங்கப்பட்ட பொருட்கள் இந்த காலகட்டத்தில் எங்களுக்கு மிகவும் மதிப்புமிக்கவை மற்றும் முக்கியமானவை. மேலும் எங்கள் நோயாளர்களுக்கும் முன்கள சுகாதாரப் பணியாளர்களுக்கும் அதிகபட்ச பயனை உறுதி செய்ய அவற்றை திறம்பட பயன்படுத்துவோம் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

**அக்கரப்பத்தனை பிரதேச மருத்துவமனையின் மருத்துவ அதிகாரியான வைத்தியர் ரி.பீ.ரி.ஜே. பண்டார** அவர்கள் கூறுகையில், *''எங்களிடம் இருந்த மின்பிறப்பாக்கி செயலிழந்து இயங்க முடியாத நிலைமையில் காணப்பட்ட சமயத்தில் அதற்கு ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலமாக*

*நாம் போராட வேண்டியிருந்தது. இப்பகுதியில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால், எங்கள் நோயாளர்கள் கடந்த காலங்களில் பல போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எங்கள் கஷ்டங்களை புரிந்துகொண்டு எங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் மின்பிறப்பாக்கியை நன்கொடையாக வழங்கிய யூனிலீவர் நிறுவனத்திற்கு எமது நன்றியை வெளிப்படுத்துவதற்கு வார்த்தைகள் கிடையாது,''* என்று குறிப்பிட்டார்.

இந்த நன்கொடை குறித்து, **லிந்துலவில் உள்ள பிரதேச மருத்துவமனையின் மாவட்ட மருத்துவ அதிகாரியான வைத்தியர் சந்துன் ஜெயலத்** அவர்கள் கூறுகையில், *''நாடு முன்னெப்போதும் முகங்கொடுத்திராத வகையில் சுகாதார நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ள இக்காலகட்டத்தில் அத்தியாவசிய சத்திர சிகிச்சை உபகரணம் மற்றும் ஏனைய பொருட்களை நன்கொடையாக வழங்கிய யூனிலீவர் நிறுவனத்துக்கு மருத்துவமனை நிர்வாகமும் நானும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

யூனிலீவர் நிறுவனத்தின் மனமுவந்த பங்களிப்புக்கு நன்றி தெரிவித்து, **லிந்துலவில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மருத்துவ அதிகாரியான வைத்தியர் ஜனத் அபேகுணரத்ன** அவர்கள் கருத்து வெளியிடுகையில், *''இலங்கையில் கொவிட்-19 தொற்றுநோயின் பின்னணியில் எங்கள் சுகாதார அதிகாரிகள் பிசிஆர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், அவர்களுக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டுள்ள இந்த நன்கொடைக்காக யூனிலீவர் நிறுவனத்துக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்கள் சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான எங்கள் வேண்டுகோளின் பேரில் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களை அவர்கள் மனமுவந்து நன்கொடையாக வழங்கியுள்ளனர். உதவி தேவைப்படும் நேரங்களில் எங்களுக்கு உதவியுள்ள நிறுவனத்தை நாங்கள் உண்மையிலேயே பாராட்டுவதுடன், எதிர்காலத்திலும் அவர்களின் அன்பான ஆதரவை எதிர்பார்க்கிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

யூனிலீவர் நிறுவனம் 2020 மார்ச் முதல் கொவிட்-19 நிவாரண முயற்சிகளுக்காக ரூபா 70 மில்லியனுக்கும் மேற்பட்ட பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன், அதன் பல்வேறு வர்த்தகநாமங்கள் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் பாதுகாக்கும் முயற்சிகளில் முன்னிலை வகித்துள்ளன. இந்நிறுவனம் சமீபத்தில் ரூபா 10 மில்லியன் பெறுமதிமிக்க 32 ஒட்சிசன் செறிவூட்டிகளை சுகாதார அமைச்சிற்கு நன்கொடையளித்துள்ளது. அதன் சுத்தம் பேணல் வர்த்தகநாமமான லைஃப்போய், நாடு முழுவதும் 100 லைஃப்போய் கை கழுவும் மையங்களை அமைத்துள்ளதுடன், மற்றும் சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சமூக அங்கத்தவர்களுடன் தொடர்ந்து ஈடுபாடுகளை முன்னெடுத்து வருகிறது. யூனிலீவர் நிறுவனத்தின் முயற்சிகளில் கொவிட்-19 சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு நன்கொடை அளித்தமை மற்றும் தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள், செயற்கை சுவாச எந்திரங்கள், முகக்கவசங்கள் மற்றும் அத்தியாவசிய யூனிலீவர் தயாரிப்புகள் ஆகியவற்றை தொற்றுநோயைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் நோக்கில் செயல்படுகின்ற அரசாங்கம் மற்றும் தொடர்புபட்ட அமைப்புக்களுக்கு வழங்கியமை போன்றனவும் அடங்கியுள்ளன.